உ

சிவமயம்

# அருள் ஒளி

மலர் 6

தை மாத இதழ்

## பொங்கல் சிறப்பு மலர்

## தை பிறந்தால் வழி பிறக்கும்

25/01/2003





2003

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சித்திரபானு வருடம் தை மாதம்

வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

கொழும்பு தமிழ்ச் சங்க
மலர்
நூலகம்

## யாழ் பல்கலைக் கழகத்தில் பண்ணிசையும் கதாப்பிரசங்கமும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் பண்ணிசையும் கதாப்பிரசங்கமும் தனிப்பிரிவாக இவ்வாண்டு ஆரம்பிக்கப்படுவது மிகவும் வரவேற்பிற்குரிய விடயமாகும். பண்ணிசையைப் பேணுகின்ற மரபில்சற்றுத் தளர்வு ஏற்பட்டிருக்கும் வேளையில் இச்செய்தி சைவத் தமிழர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. இந்தியாவில் குறிப்பாகத் தென்னகப் பல்கலைக்கழகங்களில் இசைத்துறையில் பண்ணிசை ஒரு பகுதியாக முன்பு கற்பிக்கப்பட்டது. பண்ணிசைத் துறையின் பாரம்பரியத்தைப் பேணவேண்டும் என்று தமிழகத்து சைவ ஆதீனங்கள் காலத்துக்குக் காலம் தக்க முயற்சிகள் செய்தன. ஈழத்திலிருந்து பலர் தமிழகம் சென்று முறையாகப் பண்ணிசை பயின்று அதன் மகத்துவத்தை எம் மண்ணில் பேணியமை மறக்க இயலாது. தமிழகத்தில் பண்ணிசை பயின்ற பலருக்கு தமிழகத்துக் கோவில்களில் ஓதுவார்களாக ஊதியத்துடன் பணியாற்றுகின்ற வாய்ப்பு பலவருட காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் ஈழத்தில் பண்ணிசை படித்து நாடு திரும்பியவர்களுக்கு தக்க வேலை வாய்ப்பு வழங்கப்படாதது பெருங்குறைபாடாகும். இன்று தர்மபுர ஆதீனத்தில் கற்று வெளியேறிய ஓதுவார்களில் சிலர் சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்தில் உள்ள இந்து ஆலயங்களில் ஓதுவார்க

ளாகக் கௌரவத்துடன் பணியாற்றி நல்ல ஊதியம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. யாழ் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் தனிப்பிரிவாகப் பண்ணிசை சில ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர்கள் இத்துறையில் அதிக ஆர்வம் காட்டவில்லை. கர்நாடக சங்கீதத் துறைக்கு முதன்மை கொடுத்தனர். தாம் சார்ந்த, தம் சமயம் சார்ந்த இத்துறையைக் கற்பது தகுதி குறைந்ததாக கருதி கற்ற ஒருசிலரும் கைவிட்டனர். சில இசைத்துறை சார்ந்த வழிகாட்டிகளும் பண்ணிசையால் பயனேது என்று இத்துறையின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தனர். எனினும் இன்று இறையருளாலும் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களது ஆக்கபூர்வமான முயற்சியாலும் பண்ணிசைத்துறை மீண்டும் இவ்வாண்டு புத்துயிர் பெற்றுள்ளது. கர்நாடக சங்கீதத்திற்கு ஈடாக இத்துறைசார் கல்வித்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராஜா அவர்கள் பாடத்திட்டமிடலை துறைசார் அறிஞர்களோடு கூடி உருவாக்குவதாக அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். பாரம்பரியமான கலைவடிவங்களில் ஒன்றாகவும், இயற்றுறை சார்ந்ததாகவும், பண்ணிசையோடு ஒன்றியதாகவும் உள்ள கதாப்பிரசங்க மரபை பண்ணிசைத்துறையில் கற்கும் மாணவர்களுக்குப் பிரதான பாட அலகாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பது பெரும் வரவேற்பிற்குரிய வரலாற்று நிகழ்வாகும். இத்துறையின் வளர்ச்சி எதிர்காலத்தில் இந்துப்பண்பாட்டடிப்படைகளைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதில் ஐயமில்லை. கதாப்பிரசங்க மரபு இந்தியாவிலும் இலங்கையிலும் அருகிப்போகும் வேளையில் யாழ் பல்கலைக்கழகத்தில் இத்துறைக்கு உயிர்கொடுக்க முனைந்த துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, துறைசார் அறிஞர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறவேண்டியது சைவத்தமிழர்களின் கடமையாகும். இரண்டு ஆண்டுகட்கு முன்பு சித்திரமும் வடிவமைப்பும் என்ற துறை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டமையால் பலநூறு மாணவர்கள் அத்துறையில் பயின்று சிற்ப ஓவியங்களைப் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர். இப்புதிய பாடப்பிரிவுகளில் கற்று வெளியேறும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க கல்வி, கலாச்சார அமைச்சுக்கள் முன்வரவேண்டும். பொதுவாக தொழில்வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு உயர்கல்வி கற்கும் நடைமுறை நாகரிகம் எம்மைச் சூழ்ந்திருப்பதனால் மாணவர்களது மனதில் இத்துறைசார் கல்வியை நம்பிக்கைக்குரியதாக உருவாக்குதல் சம்பந்தப்பட்ட அனைவரதும் கடமையாகும். எமது பாரம்பரியக் கலைவடிவங்களை பல்கலைக்கழகக் கல்வியூடாக காப்பாற்ற முனைந்த அனைவருக்கும் அருள் ஒளி இனிய நன்றியினையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கிறது.

**ஆசிரியர்**

# அருள் ஒளி தகவல் - களஞ்சியம்

* சர்வதேச இந்துமத குருபீடத்தின் வேதாகம குருகுலம் திறப்பு விழா

* இந்து கலாச்சார அமைச்சின் உதவியுடன் குருபீடாதிபதி சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் அவர்களின் முயற்சியால் யாழ் பருத்தித் துறை வீதியில் ஆனைப்பந்தி குருநாதசுவாமி கோயில் அருகே வேதாகம குருகுல நிலையம் உருவாக்கப்பட்டு தைப்பூச நாளில் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய கட்டிடம் கோப்பாயில் தைப்பூச நன்நாளில் திறந்து வைக்கப்படவுள்ளது. மானிப்பாய் தொகுதி முன்னாள் பா. ம. உறுப்பினர் அமரர் தர்ம லிங்கம் குடும்பத்தின் 200 பரப்பு காணியில் இவ்நிறுவனம் அமைக் கப்பட்டுள்ளது. கல்லூரி வளாகத்தில் தங்கி கற்கும் மாணர்கள் நித்திய பிரார்த்தனை செய்வதற்காக புதிய விநாயகர் கோயில் அமைக்கும்பணி ஆரம்பிக்கவிருப்பதாக கல்வியியற் கல்லூரி உயர் பீடாதிபதி கலாநிதி திரு. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

* கைதடி சைவச்சிறுவர் இல்லம் மீண்டும் கைதடியில் இயங்க ஆரம் பித்துள்ளது. இந்துசமயப் பேரவையின் மேற்படி இல்லம் போரி னால் பாதிக்கப்பட்டு தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள் ளது.

* சைவ வித்தியா விருத்திச்சங்கம் நடாத்தும் திருநெல்வேலி நிறை வாழ்வு இல்லத்துக்கு புதிய வான் வாகனம் கொள்வனவு செய் யப்பட்டுள்ளது. மாணவர்களின் தேவைகளுக்கு பயன்படுத்துவதற் காக நோர்வே அன்பர்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

* இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம் - யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கற்கும் வசதிகுறைந்த 5 மாண வர்களுக்கு தொடர்ந்து மாதா மாதம் ஆயிரம் ரூபா வீதம் உதவி வழங்கி வருகிறது.

* இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் செயற்கைக் கால்கள் பலவற்றை ஈழத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்துவதற்கு அனுப்ப முன்வந்துள்ளது.

# அருளொளி காட்டி அருளுமம்மா

அன்னை உனதடி நாளும் பணிந்திட
    அருளும் சிவசக்தி
அருள்மிகு தெல்லிப் பதியுறை தாயே
    வீரம காசக்தி
என்றும் உன்னடி தொழுதெழில் பெறவழி
    காட்டும் காட்டுமம்மா
எழிலுடை யாளே எனையாள் தாயே
    மஹிஷ மர்த்தனியே

அல்லல்கள் தீர அருளொளி காட்டும்
    ஆதிப ராசக்தி
அருள்மிகு உழுகொடைப் பதியெழ சுடரே
    தெய்வம காசக்தி
கல்லிலும் கசிந்தெழ கருணையின் வடிவே
    கலிகெட வலியருளும்
கருமவி னைகெடுத் தருளிடும் தாயே
    காத்தருள் புரியுமம்மா

புவியினில் நாம்படும் துயர்மறைந் தோட
    புதுமைந லமருளும்
புந்தியில் வந்தொளி தந்தெமை யாளும்
    பூரணி எம்தாயே
குவிந்திடும் இருகரம் கொண்டுனைத் தொழுதிட
    குணமுறு நிலையருளும்
குவலய மீதருள் ஒளியினைக் காட்டியே
    இன்னருள் செய்யுமம்மா

வாட்டிய துயரங்கள் போதுமென் தாயே
    வனப்புறு நிலைகாட்டும்
வானவர் துயரம் தணிந்திட மஹிஷனைத்
    தடிந்தவளே அருளும்
சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
    வாள்திரி சூலம் கதை
தாங்கியே திருநடம் புரிந்திடும் தாயே
    தண்ணருள் கூட்டுமம்மா!

ஆக்கம் :
'' இளங்கவி பாரதிபாலன் ''
**சு. குகதேவன்**
தெல்லிப்பழை.

உ

# எங்கெழிலென் ஞாயிறு

இணுவில் சோ. பரமசாமி, B. Sc.

சமய குரவர் நால்வருள் - ஞானமார்க்கத்தில் ஒழுகி, இறையடி சேர்ந்தவர் திருவாசகம் தந்த மணிவாசகர். திருப்பெருந்துறையில் குருவடிவாய் வந்து ஆட்கொண்ட ஆண்டவன், தன்னைத் தனியாக விட்டுப் பிரிந்ததை எண்ணி யெண்ணிப் புலம்பியவர் மணிவாசகப் பெருமான். இவர் தமது அனுபவத்தையும் ஆவலையும் திருவருள் சுரந்த திறத்தையும் உள்ளடக்கி அருளியது திருவாசகம். இதில் நீத்தல் விண்ணப்பம் முடியவுள்ள திருப்பாடல்கள் - சற்குருவாய்த் தோன்றிய இறைவன் மறைந்து சென்ற மாயத்தை மறக்க முடியாது, அழுதழுது நெக்குருகுவதாய் அமைந்துள்ளன. மாணிக்கவாசகரின் ''திருப்புலம்பல்'' அவரது நெஞ்சக்குமுறலை அப்படியே படமெடுத்துக் காட்டுகின்றது.

''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்ற அங்கலாய்ப்பில் ஊரூராய்த் திரிந்து குரு வடிவாய் வந்த கோமானைத் தேடினார். தாம் செல்லும் இடங்களில் அவ்வக்கால இயற்கை வளங்களையும் மக்கள் வாழ்க்கை முறைகளையும் நேரில் கண்டார். காடும் கரையும் கால் விட்டோடும் மனக்குரங்கு மக்களை நெறியல்லா நெறிப்படுத்தும் இறையடி காண ஏதும் அறியாதோர் சிறு நெறியிற் செல்லாது, திருவருளைச் சேருதற்கான மார்க்கம் அறிய முயன்றார். மாநிலத்துள்ளோரில் வைத்த இரக்கத்தால், இறைநாமம் சொல்வதன் மூலம் அவர்களின் நடைமுறைகளை மாற்றத் துணிந்தார். பாறை நெஞ்சையும் பாகாய் உருக்கும் அவரின் திருவாசகத் தேன் நினைக்கும் தொறும் காண்தொறும் பேசும் தொறும் எப்போதும் திருவருள் இன்பம் பெருக்கும்.

இறைவன் - மானிடச் சட்டை தாங்கி - மக்களை ஆட்கொள்ள மண்ணில் தோன்றினார் எனத் திருவாதவூரடிகள் புராணம் கூறுகின்றது. எனவே, நமக்கு வாய்த்த இப்பிறவியில் இறைவனைச் சேவிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறவந்த மணிவாசகர்-

''கால முண்டாகவே காதல் செய்துய்மின்''

எனத் திருவாசகத்தில் பலவிடங்களிற் சுட்டிக் கூறியுள்ளார். மேலான தெய்வத்தை அடைவதற்கு இப்பூமியே உதவக்கூடியது. அதனால் -

" புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே... "

எனப் பிரமா, விட்டுணு போன்ற தேவர்கள் கழிவிரக்கப்படுவதாகத் திருப்பள்ளியெழுச்சியின் இறுதிப்பாடல் எடுத்துச் சொல்கிறது.

தலயாத்திரையின் போது ஆங்காங்கு அடிகளார் கண்ட காட்சிகளையும் அந்நாளில் இருந்த மக்களின் வாழ்க்கை நடைமுறைகளையும் நன்கு அவதானித்தார். நன்றும் தீதும் அறியாத மக்களை நல்வழிப்படுத்த விரும்பினார். அவர்களின் வாழ்க்கைப் போக்கில் குறுக்கிடாது, அவர்களுடன் நயமாகப் பழகி, அவர்களைத் தெய்வ நெறிப் படுத்தியமை வாதவூரரின் தெய்வீக ஆற்றலாகும்.

'அம்மனை' என்பது மகளிர் ஆடும் விளையாட்டுக்களுள் ஒன்று. மகளிர் பாட்டிசைத்தவாறு அம்மனையைக் கையிலேந்தி, மேலே மாற்றி எறிந்து விளையாடுவதே அந்த விளையாட்டாகும்.

திருவாதவூரர் திருவண்ணாமலையில் சிலகாலம் தங்கி இருந்த பொழுது, பாட்டிசைத்த வண்ணம் பெண்கள் அம்மனை விளையாடுவதைக் கண்டார்.

" புரியும் தொழில் யாவையும் நின் பூசனையாய்ப்
புரியும்படி செய் பரிபூரணனே "

என்ற கோட்பாட்டை மனதிற்கொண்ட அடிகளார், அம்மனை ஆடும் மகளிரை நோக்கி.

" பெண்களே! பெருந்துறைப் பெருமான் வீடுபேறு அருளுவதற்கு அந்தணனாய் வந்துள்ளார். அந்த அங்கணனின் வீரக்கழல் அணிந்த திருவடிகளை வாழ்த்திக் கொண்டு அம்மனை ஆடுங்கள் "

என்று இதமாக அறிவுறுத்தும் முறைமை மிகவும் நுட்பமானது.

திருவம்மானைப் பகுதியில் அம்மானை ஆடும் மகளிரின் உரையாடலாக அங்குள்ள பெண்ணொருத்தி தன்னோடு விளையாடும் மற்றொருத்தியை நோக்கி-

" கேட்டாயோ தோழி, கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய் "

என இறைவன் தன்னை ஆட்கொண்ட முறையைக் கேள்வியுற்றாயோ என்று வினாவித் தலைவி கூற்றாகத் தன் உள்ளத்து அனுபவத்தை அகங்குழைந்து கூறியமை கூர்ந்து நோக்கற்பாலது.

அடிகளார் - ஒருமுறை தில்லையில் இருந்தபொழுது கூத்தப்பிரானின் ஆண்டுப் பெருவிழா - மகோற்சவ விழா - நடந்துகொண்டிருந்தது. அவ் விழாத் தொடர்பிலே இறுதி நிகழ்வான தீர்த்தத் திருநாளன்று, சுவாமி தீர்த்தமாடச் செல்வதன் முன், மங்களகரமாகப் புறப்படுதற் பொருட்டுப் பாட்டிசைத்துப் பொற்சுண்ணம் இடித்தனர். ஈற்றிலே, இடித்த பொடி யைக் கும்பத்து நீரில் கலந்துகொண்டு நீர்நிலைக்குப் புறப்படுவதைக் கண்டார்.

அதனைக் கண்ட அடிகள் பொற்சுண்ணம் இடிக்கும் மண்டப அமைப் பையும் திருவருட் சிறப்பையும் புகழ்ந்து பாடுதற்கு ஏற்ற வகையில் திருப்பொற்சுண்ணப் பாடலை அருளிச் செய்துள்ளார்.

விளையாட்டு வேளையாயினும், அவ்வேளையைத் தவப்பொழு தாக்க விரும்பிய அடிகள், மகளிர் கைகொட்டி ஆடும் விளையாட்டின் போது இறை சிந்தனையுடன் விளையாடுமாறு ''திருச்சாழல்'', ''திருவுந்தியார்'', ''திருத்தெள்ளேணம்'' போன்ற பகுதிகளை அரு ளிச் செய்துள்ளார்.

இமைப்பொழுதும் நெஞ்சைவிட்டு நீங்காத இறைவனைப் பிரிந் திருப்பதால், உள்ளத்தில் ஏற்பட்ட ஏக்கத்தைக் குயிலுக்கும் தும்பிக்கும் சொல்லி இறைவனிடம் தூது அனுப்பும் பாங்கு பண்டைய மரபு முறை யினைத் தழுவியுள்ளது.

பழைய பாரம்பரியத்தில் தம்மை வளர்த்துக் கொண்ட அடிகள், சிலகாலம் திருவண்ணாமலையில் தங்கி இருந்தார். அவர் இருந்த காலம் - மாரி பெய்யும் - மார்கழி (தனு) மாதமாதலால் பாவை நோன் பின் பொருட்டு வைகறையிலே துயில் நீத்த கன்னியர்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பிக் கொண்டு நீர்நிலைகளுக்குச் சென்றனர்.

அங்கு தமது நியதிகளை முடித்த பின்னர், தூய வெண் மணலால் பார்வதி தேவிக்கான படிமம் அமைத்து, தமக்குச் சிறந்த கணவர் கிடைக்கவும் மழைவளம் சிறக்கவும், அருள் சுரக்க வேண்டும் என்று அப்பாவைக்கு வழிபாடு செய்ததைக் கண்ணுற்றார். அவர்களின் செயல்களைக் கண்டு களிப்புற்ற திருவாதவூரடிகள் அம்மகளிரின் கூற்றாகப் பாடியருளியது திருவெம்பாவைப் பாடலாகும்.

ஆதிரையை (திருவாதிரையை) இறுதி நாளாகக் கொண்டு பத்து நாட்களுக்கு முன் தொடங்கித் தூய்மையுடன் நோக்கும் காலம் திருவெம் பாவைக் காலமாகும். இக்காலத்தில் நோற்கும் நோன்பைப் **பாவை நோன்பு** என்பர். பாவை நோன்புக் காலத்தில் ஆயர்பாடியில் ஆயர்குலக் கன்னி யரும் கண்ணனைத் தலைவனாகக் கொண்டு நோற்கும் அம்பாவாட லும் இக்காலத்திலேயே தொடங்கி நிறைவெய்துவதால், **மார்கழி நீராடல்** ஒரு முக்கிய நோன்பாக முன்னாளிலிருந்து கொண்டாடப் பெற்று வருகிறது. மார்கழி நீராடலைத் **தை நீராடல்** என்றும் பழந்தமிழ் நூல்கள் கூறும்.

திருவாசகத்திலே மார்கழி நீராடும் வரலாற்றினைக் கூறும் பகுதியில் இருபது திருப்பாடல்கள் உள்ளன. இவற்றின் இறுதிகள் தோறும் ''எம்பாவாய்'' என்ற தொடர்மொழி வருவதால் திருவெம்பாவை என்னும் காரணப்பெயர் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

பழந்தமிழர் பண்பாட்டின்படி ஒருத்திக்கு ஒருவனே கணவன் என்ற முறையில் ஒழுகுவதே கற்புநெறி என்ற கோட்பாடு இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஓர் இறைவனுக்கு அடிமை பூண்ட ஆன்மா, அவ்வொருவருக்கே உரித்துடையதாகும்.

அந்த முறையினைக் கைக்கொண்ட அடிகள், இறைவனுக்கு விண்ணப்பம் செய்யும் பாங்கு மிக வலுவுடையதாயுள்ளது. ''எமது மார்பகம் நின் அன்பரல்லாதவர் தோளைச் சேரமாட்டாது; எமது கை, உனக்கு அல்லாது, மற்றொருவருக்குத் தொண்டு செய்யாது; எமது கண்கள் தேவரீரது திருக்கோலத்தை அன்றி, வெறொன்றையும் பார்க்க மாட்டாது என்ற கோட்பாட்டில் எமது உறுதிப்பாடு உள்ளது. உன் கையிற் பிள்ளையாக நாம் அடிமைப்பட்டு விட்டதால், இளஞாயிறு கிழக்குத்திசையில் உதித்தாலென்ன மேற்குத்திசையில் உதித்தாலென்ன எமக்குக் கவலையில்லை.''

''... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு ... ... ...''

என்பது திருவெம்பாவையில் ''உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்'' என்ற தொடக்கத்தையுடைய பாடலில் வருகிறது.

நாங்கள் சிவனடியார்; உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியார்; எமக்கு என்ன குறையுமில்லை.

எனவே, உன்னைப் பிரானாகப் பெறுதலும் உன்னடியாரைக் கணவராக அடைதலும் அவரையே விரும்பிக் காண்பதும் இறை வழிபாடு செய்தலுமே எமது கடமையாகும். ஆகவே ஞாயிறு எங்கே உதித்தாலும் உதிக்கட்டும்; கவலையில்லை.

இத்தகைய மனப்பான்மை ஊனமொன்றில்லா உத்தமர்க்கு ஆளானவர்க்கே உண்டாகும்.

''நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே''

என்று வாதவூரடிகள் பிறிதோரிடத்திலும் கூறியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

உ

# மனப் பலவீனத்தை அகற்றும் ஆன்மீக நெறி

சரசாலை த. சிவசங்கரநாதன்

மனிதன் தன் வாழ்க்கையின் விரோதிகள் என்று யார் யாரைப் பற்றியெல்லாமோ எண்ணுகிறான். யார் யாரிடமோ சண்டை போடுகிறான் சச்சரவுகள் செய்கின்றான். ஆனால் தன்னுடைய உண்மையான எதிரியை வாழ்க்கையின் எதிரியை அவன் சரியாக அடையாளம் கண்டு கொள்ளவில்லை; வாழ்க்கையைக் கெடுத்து மனிதனை அலைக்கழித்து வீணாக்கும் அந்த விரோதிகளை அடையாளம் காண்பிக்கும் அரும்பணியைத்தான் பண்டைய நாள் முதல் சமய பேரறிஞர்கள் செய்து வருகிறார்கள். சமயத் தலைவர்களின் திருப்பணி என்பது மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி சீர்திருத்தி அவர்கள் இன்பமுடன் வாழ உதவுவதாகவே இருந்து வந்திருக்கின்றது சமயத் தலைவர்களின் உபதேசங்கள் அறிவுரைகளை ஊன்றி நோக்கினால் அவற்றில் பெரும் பகுதி மனித சபலங்களுக்கு வழிகோலும் ஆசைகளைச் சாடுவதாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு பல வழிபட்ட ஆசைகளுக்கு சமயத் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவிப்பதற்கு காரணம் இருக்கிறது. அவையே மனிதனுடைய ஆற்றலை அறிவை பயன்படுத்தி மனத்தை சீரழிக்கும் இயல்பு படைத்திருக்கின்றன. உலகில் மனிதன் ஒரு பிடிப்பான இலட்சியவாதியாக திகழாமல் நெறிகெட்டலைந்து தாறுமாறாக வாழ்க்கை நடாத்துகிறான் என்றால் அவன் புலன் இன்பங்களில் மனதைச் செலுத்திக் கெட்டுப்போனவன் என்று எளிதாக அவனது நிலைமையைத் தெரிந்து விடலாம். புலனடக்கம் இல்லாதவர்கட்கு அறிவு ஒரு நிலைப்படுவதும் கிடையாது எந்தப்பணியில் ஈடுபட்டு உழைத்தாலும் அத்தகைய குணக் கோளாறு பெற்றவர்களுக்கு செய்யும் பணியில் ஈடுபாடு இருக்காது. இத்தகைய இயல்புடையவர்கள் சஞ்சல மனத்தினராக இருப்பர். இதனால் அவர்களுக்கு நல்ல மனவலிமை இருக்காது. புலனடக்கம் இல்லாத காரணத்தால் உலகில் பெரியகுற்றவாளிகள் திருந்தாமலே உள்ளார்கள்.

இந்த வகையான உண்மைகளையெல்லாம் ஆராய்ந்து கண்ட காரணத்தால் தான் சமயப்பெரியோர்கள் புலனடக்கம் ஒன்று தான் மனிதனைச் சொந்த வாழ்விலும் ஆன்மீக நெறியிலும் கைதூக்கிவிடும் சாதனம் என உணர்ந்தனர். தாங்கள் உணர்ந்தவற்றை மற்றவர்கட்கு உணர்த்த முற்பட்டனர் புலன்வழிப் பேராசை மனிதனுடைய ஒழுக்கத்தை

பண்பை சிதைத்து விடுகிறது. ஒழுக்கம் என்பது நல்வாழ்வின் பீடமாகத் திகழ்வதால் ஒழுக்கத்தைப்பெற மனிதன் புலனடக்கம் கொள்ள வேண்டும் என்பது இறைவனை அடைவதற்கான நுழைவாசல் (அத்தீவாரம்) என சமயப் பேரறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். திருநாவுக்கரசர் கட்டுப்பாடற்ற ஐம்புலன்களை ஐந்து எதிரிகள் என்பது போன்றே விளக்கம் தந்துள்ளார். ஐந்து எதிரிகளால் அலைக்கழிக்கப்பட்டு நொந்ததாகக் கூறியுள்ளார்.

ஐவரால் அலைக்கழிக்கப்பட்டேன் என நாவுக்கரசர் கூறும்போது ஐவர் என்று குறிப்பிடும் ஐம்புலன்களையும் மனித சமுகத்தின் எதிரிகள் போன்ற வெறுப்புடனேயே பேசுவது விளங்குகிறதல்லவா. மனச்சாந்தியைக் கெடுக்கும் புலன்கள் இழுத்த வழிசெல்லாமல் புலனடக்கம் கொண்டு மனச்சாந்தியைப் பெற்று வாழ்வது தான் மனிதவாழ்வின் உயரிய நோக்கம் என்பது நாவுக்கரசரின் அறிவுரையாகும். உலகத்தில் உடல்வலிமை மிக்க ஒருவனும் ஐம்புலனின் சபலம் காரணமாக மனப்பலவீனமடைந்து வாழ்க்கையை வீணாக்கி கொள்கிறான். ஐம்புலன் இச்சைகள் அடக்கமாட்டாமல் அறிவாளியும் அறிவிலியாகி விடுகிறான். வாழ்க்கையில் பல பெரிய சாதனைகளை புரிந்த அறிஞர்கள் மேதைகள் மகான்கள் புலன்வழி ஆசைகளை ஒழித்தவர்களாகவே உள்ளனர். ஆகவே தான் ஐம்புலன் அடக்கம் என்பது ஒரு ஆன்மீக நெறிமுறையாகவே பண்டைக்காலம் முதல் கருதப்பட்டு வருகிறது. இலங்கைத் தமிழர்கள் இடப்பெயர்வினால் மனப்பெலவீனம் அடைந்தாலும் இறைவன் மீதும் ஆன்மீக நெறியில் கொண்ட நம்பிக்கையினாலும் இன்று உலகெல்லாம் சென்று வாழ்ந்தாலும் தாம் வாழ்ந்த பிறந்த பூமியை நேசிப்பவர்களாகவே உள்ளனர். இவை தொடரவேண்டும் இன்றைய காலத்தின் தேவையும் ஆகும்.

★ ★ ★

## துர்க்காதேவி

தெல்லிநகர் வந்துறையும் துர்க்காதேவி
தினந்தினமும் தொழுதுநின்றோம் அம்மாதாயே
வரவேண்டும் வரவேண்டும் எம்மை நோக்கி
திரிசூலம் தாங்கிநிற்கும் தாயே துர்க்கா

வேப்பிலையில் விருப்பம் வைத்த காளியம்மா
எம்தீராத நோய்களெல்லாம் தீர்ப்பாய் தாயே
புஷ்கரணியில் தீர்த்தமாடி மகிழும்தாயே
புண்ணியங்கள் எங்கும் நிறைய அருளும் தாயே.

ஆக்கம் : செல்வி கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை.
மானிப்பாய்.

# "தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்"

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

*சைவத்தமிழ் மக்களின் சிறப்பான திருநாட்களில் தைப்பூசம் மேன்மையான இடத்தைப் பெறுகின்றது. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது நம் முன்னோர் நம்பிக்கை. ஏனெனில் தைமாதத்தில் தான் உழவர்களின் உழைப்பு வீடு வந்து சேரும் மாதமாகும். அத்துடன் தனது உழைப்பின் பயனை அனுபவிக்கும் காலமும் இதுவேயாகும். இத்தகைய சிறப்புமிக்க மாதத்தில் வருவதே தைப்பூசத் திருநாளாகும். இத்தினத்தில் தான் உழவன் தான் உழைத்ததன் பயனாகக் கிடைத்த நெல்மணிகளைப் பக்குவப்படுத்தி தனது இல்லத்துக்குக் கொண்டு வந்து விழா எடுக்கின்றான். இதன் மூலம் உணவு வளமும் உணர்வு வளமும் பெருக்கும் விழாவாக தைப்பூசவிழா அமைகின்றது. உணர்வு பெருகினால் தான் உயிர் தழைக்கும். உணர்வு தழையாத போது உணவினால் பயனில்லை.*

*திருஞானசம்பந்தப் பெருமான் தனது திருப்பதிகத்தில் தைப்பூசத்தின் மேன்மையைப் பாடுகின்றார்.*

''மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சுரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்''

*பூம்பாவாய் என்ற பெண் இறந்தபோது ''பெண்கள் கொண்டாடும் தைப்பூசத் திருநாளைக் காணாது இறந்து விட்டாயே. நீ பிறந்தும் இப்பூசத் திருநாளைக் காணும் பலன் பெறாது போய்விட்டாயே'' என்ற கருத்துப்பட அமைந்த பாடல் தைப்பூசத்தின் சிறப்பினை உணர்த்தும்.*

*அத்துடன் தைப்பூசவிழா பெண்கள் கொண்டாடும் விழாவாகவும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்திலிருந்தே வழக்கில் இருந்ததாகக் கொள்ளமுடியும். சோற்றை நெய்யுடன் கலந்து இறைவனுக்குப் படைக்கும் மரபையும் திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இம்மரபை வைணவ மரபிலும் காணமுடியும். ஆண்டாள் பெருமாட்டியும் ''நெய் பெய்து முழங்கை வழிவாரக்...'' என்ற அடிமூலம் இதனை உணர்த்துகின்றார்.*

பன்னிரு இராசிகளில் கர்க்கடக இராசியில் அங்கம் வகிக்கும் இப் பூசத் திருநாளின் சிறப்புப் பற்றிப் புராண, இதிகாசங்கள், திருமுறைகள் எடுத்துக் கூறுகின்றன. புதிதுண்ணல், ஏடுதொடக்குதல் போன்ற புண்ணிய கருமங்களும் இத்தினத்திலேயே ஆற்றப்படுகின்றது. இத்தினத்தை பௌத்தமத மக்களும் ஏற்றிப்போற்றுவர். ஏனெனில் புத்த பெருமான் ஞானம் பெற்ற தினமாகவும் இதனைக் கொள்வர் பௌத்தர்கள். சைவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இவ்விழா பொதுவாக அமைகின்றது.

தாருகாவனத்தின் கண் வாழ்ந்த முனிவர்களின் கர்வத்தை அடக்குவதற்காக மகாவிஷ்ணு மோகினியாகவும் சிவபிரான் பிச்சாடனாராகவும் வடிவங்கொண்டு சென்றமையை விஷ்ணுபிரான் ஆதிசேடனுக்கு உரைத்தார். இதனைக்கேட்ட ஆதிசேடனும் தானும் இக்கூத்தைக்காணத் தவமனுட்டிக்கும் வியாக்கிரபாத முனிவருக்கும் ஆதிசேடனுக்கும் தம் நடனக்கோலத்தை ஆடிக்காட்டிய சிறப்புமிக்க நன்னாளும் இத் தைப் பூசத் திருநாளே ஆகும். இதனை உணர்த்தவே தைப்பூசத் திருநாளில் சிவன் கோவில்களில் பிச்சாடனர் உற்சவம் நடைபெறுவது வழமையாகும். பூசத்திருநாளில் பொன்னார்சடைப் புண்ணியனைப் போற்றி வழிபடுவது சைவசமய மக்களின் கடமையாகும்.

இத்தைப்பூசமானது வியாழக்கிழமையும் சித்தயோகமும் பூரணை தினமும் கூடிவரப் பெற்றால் அதுவே சிறந்ததாகும் சைவர்கள் தாம் வாழுமிடமெல்லாம் இத்திருநாளைப் பெருவிழாவாகக் கொண்டாடுவர். ஆலயங்கள், இல்லங்கள் எங்கும் புனிதம் பேணி வழிபடுவர். இத்தினத்தில் இறைவழிபாடு செய்து நம் பாவங்களை அகற்றி நல்வினைகள் செய்து இன்புற்று வாழ்வோமாக.

★ ★ ★

## பட்டிப் பொங்கல் விழா

தைப் பொங்கலின் மறு நாள் பட்டிப்பொங்கல் தினமாகும். உழவுத் தொழிலின் சிறப்பை எடுத்துப் பேசுகின்றது பின்வரும்பாடல் ஒன்று

''அலகிலா மறைவிளங்கும் அந்தணாகுதி விளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர் தம்பா விளங்கும்
மலர்குலாக் திருவிளங்கும் மழைவிளங்கும் மனுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும் உழவாலே.''

என எமக்கு அறியத் தருகின்றது. ''மாடு'' என்பது செல்வம் எனப் பொருள் தருகின்றது. உழவர்களின் செல்வத்துக்கு உறுதுணையாக விளங்குவன மாடுகள். மாடுகளையும், பசுக்கன்றுகளையும் மறவாது மிக நன்றிப் பெருக்குடன் நன்றி செலுத்தும் நாள் பட்டிப் பொங்கல் தினமாகும்.

பசுக்களையும், எருதுகளையும் நீராட்டி மஞ்சள், குங்குமம், சந்தனம், பூமாலை போன்ற மங்கலப் பொருட்களை அணிந்து வழிபாடு செய்வர். இவற்றிற்கு பொங்கல் பிரசாதங்களை உணவாகக் கொடுப்பர். இந்தியாவில் ''காளைகட்டும் விழா'' என சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இவ்வாறாகப் பட்டிப் பொங்கலின் சிறப்பு பேசப்படுகின்றது.

உ

# திருமுறைகளும் நாமும்

திரு. பொன்னம்பலவாணர் அவர்கள்

சைவத்தமிழ்த் தெய்வீக இலக்கியங்களாகத் திருமுறைகள் விளங்குகின்றன. இவற்றின் மேலான மகிமைக்கு எண்ணில்லாத சான்றுகள் உள்ளன. பல பதிகங்கள் தோன்றும் போதே சாதனைகளை இயற்றுவதற்காகத் தோன்றியிருக்கின்றன. எல்லாப் பதிகங்களும் திருவருளின் தூண்டுதலாலேயே தோன்றியிருக்கின்றன. பன்னிரு திருமுறைகளிலுமுள்ள பாடல்கள் எல்லாம் ஆயிரம் வருடத்துக்கு முந்தியன. அப்படியிருந்தும் அவை புதுமையுடனும் மகிமையுடனும் விளங்குவதிலிருந்தே அவற்றின் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ளலாம்.

சிவபெருமானின் திருவருளைப் பூரணமாகப் பெற உதவ வல்ல இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் இனிய இளையதமிழில் புதுமையுடன் விளங்கக் கூடியதாயிருக்கவும் சைவத் தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களை அடைவதும் இவ்வுலகில் பல சிறுமைகளை அடைவதும் இறையின்பத்தை அறியாதவர்களாய் — இறையின்பத்தை அநுபவிக்காதவர்களாய் — இறையருளால் உலக வாழ்வின் உன்னதத்தை அடையத் தெரியாதவர்களாய் இருப்பது கவனிக்க வேண்டிய உண்மையாகும்.

இத்திருமுறைகளின் பெருமைகளை அறிந்து அவற்றால் அடையத் தக்க பயன்களை அடைபவர் காலத்துக்குக் காலம் ஆங்காங்கு ஒரிருவர் வாழ்வதனாலேயே இவற்றின் மகிமை பலராலும் அறியப்படுகின்றது. பிரசங்கிக்கப்படுகின்றது. ஆனால் சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் வானொலிப்பெட்டி — ரீ. விக்கருவி — மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டை அறிந்திருத்தலும் பயன்படுத்தலும் போலத் திருமுறைகளை அறிந்து பயன்படுவது தடையற்ற — குறைவற்ற இறைஅருளின் துணைகொண்டு இவ்வுலகவாழ்வின் சிறப்புக்களையும் சரி உயிர் அடையத்தக்க உறுதியான சிவனருட்பேறு — சிவமாந்தன்மைப் பெருவாழ்வு என்பவற்றில் முன்னணி வகிக்க வேண்டும். அதனால் அயலவரும் மேன்மைகொள் சைவநீதியை நாடிவரும் நிலை உருவாக வேண்டும்.

இன்று சைவத்தமிழ் மக்கள் மத்தியில் ஆலய வழிபாட்டிலும் சரி தனிப்பட்ட வழிபாட்டிலும் சரி திருமுறைகள் மிகமிக குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது. மூன்று மணித்தியாலத்துக்குக் குறையாத ஆலய வழிபாட்டில் பத்து நிமிடநேர மளவுக்குக் கூட திருமுறை இடம் பெறுவதில்லை. ஆனால் ஆலயக் குருமார்கள் பலரிடம் கொண்ட அபிப்பிராயக் குறைவினாலும் வடமொழி பற்றி சரியான — மதிப்பான அபிப்பிராயம் இல்லாமையினாலும் வடமொழி வழிபாடு வேண்டாம். தமிழ் மொழியிலேயே ஆலயங்களில் வழிபாடு நிகழ வேண்டும் என்ற கருத்து ஆங்காங்கே வலுப்பெறுவதைக் காண முடிகின்றது. இக்கருத்தின் அடிப்படையில் தமிழகத்தில் ஒரு கோவிலில் திருமுறைகளைப் பயன்படுத்தி கும்பாஷேகம் செய்யசிலர்முயன்றதாகவும் அதற்கு சிலர் எதிர்ப்பு முயற்சியில் செயற்பட்டதாகவும் ஒரு செய்தி உலவுகின்றது.

திருமுறைகளைப் போதியளவு கற்று ஓதுதல் அதன் காரணமாக தெளிவாக வெளிப்படையாகப் பலரும் திருவருளின் தன்மைகளையும் திருவருளின் சகாயத்தையும் உணர்தல் என்ற நிலை வெகுசாதாரணமாக உண்டாதல் வேண்டும். அதன் விளைவாக சிவாகமக் கிரியைகளின் தொடர்பின்றியே திருமுறைகளைப் பயன்படுத்தி கிரியைகளைச் செய்ய சிவபெருமானது அருளாணை கிடைத்தல் வேண்டும். அப்படியன்றி திருமுறைகளை சமயச்சடங்குகளிற்கு

ஆதாரமாக பயன்படுத்துவது எங்ஙனம் பொருந்தும் என்பதே பெரும் தடையாக உள்ளது.

திருமுறைகளை (முதல் ஏழு திருமுறைகளை) முற்றுமாகத் தினம் ஓதவிரும்பிய ஒருவர் அவ்விருப்பம் நிறைவேறாத நிலையில் சிவபெருமானை வேண்டுதல் செய்ததாகவும் சிவபெருமான் அகத்தியரின் துணையினால் உன் எண்ணம் நிறைவேறும் என்று அருள; அதன் அடிப்படையில் அகத்தியர் இருபத்தைந்து பதிகங்களை அவருக்கு தெரிந்தெடுத்து உதவியதாகவும் அகத்தியர் தேவாரத்திரட்டு வரலாறு கூறுகின்றது. இவ்வரலாற்றின் அடிப்படையில் சிந்தனையாளர் திரு. பொ. கை அவர்கள் ''அகத்தியர் ஏழு திருமுறைகளையும் பாராயணம் செய்யும் பெருமை உடையவராய் இருந்தமையால் தான் சிவபெருமான் அகத்தியர் மூலம் இருபத்தைந்து பதிகங்கள் தொகுத்துச் செய்தருளினார்'' என்ற கருத்தை தெரிவித்துள்ளார். அகத்திய மகாமுனிவரே திருமுறைகளைப் பாராயணம் செய்திருக்கிறார். அவற்றில் இருபத்தைந்து பதிகங்களை ஒரு அடிப்படையில் தெரிந்து உதவியுள்ளார் என்ற செய்தியை வைத்துக் கொண்டு நாம் தெளிவடைய வேண்டிய உண்மை ஒன்று உண்டு. அகத்தியர் போன்ற சிவபூசையில் திளைத்து மகிழும் வியாக்கிரபாதர் போன்ற ஒருவரே திருமுறைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு கிரியைகளைச் செய்ய வழிவகுக்க முடியும் - தகுதி பெற்றிருப்பர் என்பதாகும்.

திருமுறைகளின் உதவியுடன் ஆலயக் கிரியைகளைச் செய்தல் என்ற விடயத்தையிட்டு அதிகம் குழம்பிக்கொள்ளாமல் திருமுறைகளைக் கற்றல் பாராயணம் செய்தல் என்பவற்றில் சைவத்தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடனும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் ஈடுபடவேண்டும்.

தமிழகத்தில் பெரும்பாலான ஆலயங்களில் தினமும் ஒருமணிநேரமோ ஒன்றரை மணிநேரமோ திருமுறை ஓதுவதற்கு ஓதுவார்களை நியமித்து திருமுறையால் பயன் பெறுகின்றார்கள். பண்ணும் பொருளும் தெரிந்து திருமுறை ஓதுபவர்கள் தேவைப்படுவதும் திருமுறை ஓதுபவர்கள் பயன்படுத்தப்படுவதும் நிகழ்கின்றது. இந்த ஒழுங்கு தவிர திருவிழாக்காலங்கள் கும்பாபிஷேக சந்தர்ப்பங்களில் ''திருமுறை அரங்கு'' ஏற்படுத்தி திருமுறை ஓதுதல் வளர்ச்சி பெற்றுள்ளது. இப்படியானவாய்ப்புக்களால் திருமுறைக்கல்வி - திருமுறை அறிவு பெருக்கமடைகின்றது.

இதுமட்டுமன்றி:-
தமிழகத்தில் கணிசமான தொகையினர் ஒருவருடத்தின் பன்னிரு மாதங்களிலும் மாதத்திற்கு ஒரு திருமுறை என வகுத்து தனிப்பட வீட்டில் பாராயணம் செய்து வருகின்றனர்.

அகத்தியர் தேவாரத்திரட்டிற்கு சிறந்த உரை எழுதிய கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் என்ற பெரியாரே பல வருடங்களுக்கு முன்னர் ஒரு வருடத்தில் பன்னிரு திருமுறைகளையும் ஓதும் முறையை ஆரம்பித்து அநுட்டித்தவர். இந்த முறை இன்று பரந்து நிலைப்பட்டு வருவது தமிழகத்துக்கு தமிழகச் சைவத்தமிழ்ச் சமூகத்திற்கு நல்ல அடிப்படை எனலாம்.

சிலகாலமாக அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதந்தோறும் பூரணை நாள்களில் அகத்தியர் தேவாரத் திரட்டு பாராயணத்தை மேற்கொண்டுள்ளது. இதுவும் இதுபோல திருமுறை முற்றோதல் கூட்டாகவும் தனிப்படவும் ஆரம்பித்தல் வளர்ச்சியடைதல் அவசியம்.

விசேட தினங்களிலும் அவசியமான சந்தர்ப்பங்களிலும் ஆலயங்களில் விசேட பூசை அபிஷேகம் என்பன நிகழ்தல்போல் திருமுறைப்பாராயணம் செய்தலும் உண்டாக வேண்டும். வளர்ச்சியடையவேண்டும்.

பாடுபட்டுச் சேகரித்து வங்கியில் சேமித்த பணம் பெரும் தொகையாக இருக்க அதை எடுத்து பயன்படுத்தத் தெரியாத ஒருவன் உணவுக்குப் பிறரிடம் இரத்தல் போல் சைவத்தமிழ் மக்கள் திருமுறைகள் இருக்கவும் இறையருளைப் பெற்று இன்புற மேன்மையுறத் தெரியாமல் இருப்பது மிகப்பரிதாபத்துக்கு உரியதாகும்.

சமயச் சிறுகதை

# தொண்டர்

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்

---

*படீர், படீர் என்று தடித்த மழைத்துளிகள் அங்கும் இங்கும் பொட்டுப் பொட்டாய் விழுந்து தெறித்தன.*

*சிவசிதம்பர உபாத்தியாயர் தனது பொத்தல் விழுந்த பழைய குடையை விரித்துப் பிடித்துக் கொண்டார். வேட்டியைப் பத்திரமாகத் தூக்கி முழங்காலளவில் மடித்துக் கட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.*

*'ரனீஸ் தேனீர்ச்சாலை' என்ற எழுத்துக்கள் வீதியின் வலது புறத்தில் தெரிந்தன அந்தக் கடை முடித்து வரும் ஒழுங்கையில் இறங்கினார் ஒரு நூறு மீற்றர் நடக்கக் கோயில் வரும் உபாத்தியாயர் இந்தக் கடையில் தென்பட்ட புதிய பெயர்ப் பலகைக்கு முன் ஒரு கணம் நின்றார்.*

*''தம்பி!'' என்று அழைத்தார் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறு பையன் வெளியே வந்தான் ''என்ன வேணும்?'' என்று கேட்டான். ''தேநீருக்குத் தன்னகரம் வரவேண்டும்'' என்றார் உபாத்தியாயர் தங்க முகில் ஒன்று கம்பீரமாய் பெரிய பட்சி போல ஆகாயத்தில் பறந்து சென்றது,*

*'அது பிறகு வரட்டும் இப்ப உங்களுக்குத் தேத்தண்ணி வேணுமோ?' என்று அவசரப்பட்டான் பையன் உபாத்தியார் பெருமுச் செறிந்து 'இல்லை' என்றார்.*

*மொழிக்கு முதலில் 'ரகரம்' வராது என்று நினைத்ததைச் சொல்லி வேலையில்லை கோயிலுக்குச் செல்லும் வெறும்பாதத்தில் பட்டகுறுணி மண் வேதனையைக் கிளறுகிறது.*

*பண்டிதமணியிடம் தான் தமிழ் படித்த போது, பெயர்ப் பலகைகள் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றில் காணப்படும் தமிழ்ப் பிழைகளைப் பற்றி அவர் தனியாகவே கரிசனை எடுத்து, அவற்றைத் தொகுத்து வகுப்பிற்குக் கொண்டு வந்து மாணவர்களைக் கொண்டே திருத்தம் செய்விப்பது நினைவுக்கு வந்தது. இப்போதெல்லாம் யார் இதைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்?*

*வீழ் எறியும் திசை எங்கும் நிழலற்று அலையும் மனிதர் பொருள் தேடுதலை மட்டுமே குறிக்கோள் எனக் கொண்டு ஒழித்திரிவது உபாத்தியாருக்குப் பெரிய சிரிப்பாயும் கவலையாயும் இரு* கொழும்பு தமிழ்ச்.

ஒழுங்கையில் ஆசிரியர் திரும்புகிறார். அங்கு அந்த வழக்கமான பெரும் இரைச்சலுடன் கூடிய தனியார் கல்வி நிலையம் அந்த மழையி லும் நூற்றுக்கணக்கான சைக்கிள்கள் அடுக்கப்பட்டுள்ளன. ஒழுங் கைக்கு அருகில் உள்ள வகுப்பில் நின்று 'கரடிபோல கத்தும்' மாஸ்டரை இவருக்குத் தெளிவாகத் தெரிகிறது. இவர் ஒரு கணம் அந்த இடத்தில் நின்று கவனிக்கிறார் 'ரியூசன் மாஸ்டரின்' கண்கள் இந்தக் காலை வேளையிலும் கொவ்வைப் பழம் போலச் சிவந்திருக்கின்றன. 'மாணவர் களின் நடத்தை மாற்றத்திற்குக் காரணமாவது ஆசிரியரின் முன் மாதிரி யான நடத்தை' என்ற வசனம அவரது மூளையில் ஓடி மறைகிறது.

'ரியூசன் மாஸ்டர்' சொன்ன ஏதோ ஒரு பகிடிக்காக, மாணவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள் பகிடி என்னவென்பது எண்பது வயதைத் தாண்டி விட்ட உபாத்தியாரின் செவியில் விழ வில்லை. சிறிது நேரத்தில் ஓரிரு கடதாசி அம்புகள் மாஸ்டரின் மேசை யில் குத்தி விழுகின்றன.

மாஸ்டர் அது பற்றி எந்த அக்கறையும் காட்டவில்லை. ஏதோ எழுதப்பட்ட துண்டுக்காகிதம் ஒன்று மாணவர் ஊடாக முன்னேறி ஆசிரியரின் கைக்கு வருகிறது. மாஸ்டர் பிரித்துப் பார்க்கிறார். சிரிக்கிறார்.

''இப்பிடிக் கேள்வியளுக்குப் பதில் சொல்ல ஏலாது'' என்கிறார். திரும்பவும் மாணவர்கள் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

உபாத்தியாயரின் வெள்ளை உடம்பில் சுருக்கம் விழுந்து விட்டா லும், அவரது உயிர்க்கலங்கள் ஒவ்வொன்றிலும் இன்னும் சமயமும் தமிழும் '' நான் இருக்கிறேன் '' என்றது. அவரது உணர்வுகள் இன் னும் பச்சையாகவே உள்ளன. பண்டிதமணி போன்ற ஆசிரியர்களின் வகுப்பின் காத்திரத்தன்மை மனதில் நிழல் விரிக்கிறது. 'நன்னூலார்' வகுத்த ஆசிரியருக்குரிய வரைவிலக்கணத்தில் வரும் ''மேன்மை'' என்ற சொல்லின் கருத்து மனதில் பெரிதாய் விரிகிறது.

இடப்பெயர்வுக்கு முன்னர் தனது சொந்தக் கிராமத்தில் வாழ்ந்த போது, குடும்பத்தகராறுகள் பலவற்றை அன்போடு அணுகித் தீர்த்து வைத்தவர் இந்த உபாத்தியாயர். பிறன்மனை நயக்கும் சிற்றாண்மை படைத்த ஆடவர் பலரைப் பக்குவமான முறையில் திருத்தி அவர் தம் இல்லத்தரசிகளின் கண்ணீரைத் துடைத்தவர்.

''பெருங்குடி'' மக்கள் பலரை இந்த விரதாதிகளால் மெலிந்து சிறுத்த தேகம் திருத்தியிருக்கிறது. சண்டியன் சரவணை இறந்த பிறகு ஊர் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தவன் யமன் இராச துரை. நாடகத்தில் 'யமன்' பாத்திரம் ஏற்பது மட்டுமல்ல, பின் கதவு

வேலைகள் பலவற்றையும் கூடப்பிழைவிடாமல் செய்யக்கூடியவன். ''என்னோடை மிண்டினால் செய்வினைதான்'' என்று ஊர் மக்களை வெருட்டக்கூடியவன். அவனும் உபாத்தியாயருக்குப் பணிந்து மரியாதை கொடுப்பான். கிராம வளர்ச்சிச் சங்கத்தில் உபாத்தியாயர் சொல்வதை இராசதுரை மீறமாட்டான்.

இப்போது இடம்பெயர்ந்து கிராமம் சிதறியபின் எல்லாம் ''பழைய கதை'' ஆகிவிட்டது.

உபாத்தியாயர் கோயிலை அண்மித்துவிட்டார் காலையின் இரு புறமும் செம்பருத்திப்பூக்கள் சிவப்புச் சிவப்பாய்ப் பூத்துக்கொட்ட அமைதியைப் பூசிக்கொண்டு நின்றது அந்த இடம். நீறு துலங்கும் நெற்றியுடன் கோபுர தரிசனம் செய்து அவர் கோயிலுக்குள் போக ஆயத்தமாகிறபோது அந்தக்காட்சி தரிசனமாகிறது.

அந்தப் பெண் குழந்தைக்குப் பத்து வயது இருக்கலாம். அழுது கொண்டே இருக்கும் பிள்ளையைத் தாயார் தான் தூக்கி வருகிறார். அப்போது வெளியே வந்த குருக்களிடம் தாயார் சொல்லுகிறார்,

''பயந்திட்டாள் போலை கிடக்கு ஒருக்காத் திருநீறு போட்டு விடுங்கோ ஐயா''

இப்போது குழந்தையின் அழுகை முனகலாகியிருக்கிறது. குருக்கள் திருநீறு எடுக்க உள்ளே போகிறார். குழந்தை திடீரென்று வீரிட்டு அலறுகிறது.

''அம்மா... பாமதி ரீச்சர் வாறா... பிரம்போடை வாறா... அடிக்கப் போறா... அடிக்கிறா... ஐயோ...''

உண்மையாக ஒருவர் அடித்தால் எப்படி இருக்குமோ... அப்படி இருக்கிறது அலறல்.

உபாத்தியாயருக்குத் தன்னைச் சுற்றியும் பெருநெருப்பு எரிவது போல இருக்கிறது. குருகுலக்கல்வி முறையில் ஒருபோதும் காணப் படாத தண்டனை முறைகள் ஐரோப்பியரால் இங்கு அறிமுகப்படுத்தப் பட்டு இன்று அதன் எச்சசொச்சங்கள் எமது குழந்தைகளைப் பாதிக் கும் தன்மை அவரின் மனதை நெருடுகிறது.

ரஷ்ய மொழி பெயர்ப்பு நூல் ஒன்றில் தான் வாசித்த ''யானுஷ் கர்ச்சாக்'' என்ற ஆசிரியரின் வாழ்வு இப்போது உபாத்தியாயரின் மனத்திரையில் படமிடுகிறது.

வார்ஸா நகரின் யூதர் பகுதியில் இருந்த அநாதை விடுதியில் ஆசிரியராகப் பணியாற்றியவர் இந்த ''யானுஷ் கர்ச்சாக்''. உலக

மகாயுத்த காலத்தில் ஹிட்லர் வாதிகள் கதியற்ற குழந்தைகளை 'திரெப் வின்கா' நகரில் நெருப்பில் இட்டுப் பொசுக்க உத்தரவிட்டனர். குழந் தைகளை விட்டு விட்டுத் தப்பிச் செல்லவோ அல்லது குழந்தைகளுடன் சேர்ந்து மடிந்து போகவோ ஏதாவது ஒரு முடிவுக்கு வருமாறு 'கர்ச் சாக்குக்கு' ஆலோசனை கூறப்பட்ட போது அவர் ஊசலாட்டமோ சந்தேகமோ ஏதுமின்றிச் சாவைத் தழுவிக்கொண்டார். குழந்தைகளை ஆரோக்கிய மரணத்திற்குத் தயாராக்கித் தானும் அவர்களுடன் பய ணித்தார் அந்த வீரர். அவரது அரவணைப்பிலே மரண பயம் இன்றி மரணத்தைத் தழுவிக் கொண்டனர் சிறுவர்கள். அப்படியான ஆசிரி யர்கள் எமது நாட்டிலுந்தான் இருந்தார்கள். ஆனால் இன்று......?

கோயில் வழிபாட்டின் போதும் உபாத்தியாயரின் மனம் அமைதி கொள்ள மறுத்தது.

மதுபானம் அருந்தாத, சிகரெட் புகைக்காத, மச்சமாமிசம் உண் ணாத, இறை நம்பிக்கை மிக்க விழுமியங்கள் நிறைந்த ஆசிரியர் ஒருவர் பாடசாலைச் சூழலில் வாழ்ந்து வந்தாலே மாணவருக்கு அது பெரும் வரப்பிரசாதமாக அமையும். அப்படிப்பட்ட ஆசிரியர் ஒருவர் ஒவ்வொரு பாடசாலை வளவிலும் கட்டாயம் உலாவர வேண்டும்.

கோயில் பூஜை முடிந்து திரும்பும்போது அந்த மகாவித்தியால யத்தின் அதிபர் அறைக்குள் திடீரென நுழைந்தார் உபாத்தியாயர்.

விநாடிக்கு விநாடி முகத்தில் வியப்புமாணி உயர அதிபர் கேட்டார்.

''வாத்தியார் வாங்கோ என்ன விசேஷம்?''

''நீங்கள் விரும்பினா நான் நாளைக்குத் தொடக்கம் உங்கடை பள்ளிக்கூடத்திலை தொண்டர் ஆசிரியரா வேலைசெய்யிறன்!!

இதயம் லேசாய் ஒருமுறை உதறிக்கொள்ள அதிபர் திகைத்துத் தான் போனார்.

''நான் ஒழுங்கா ஜீ. சீ. ஈ. ஓ. எல் சித்தியடையாத ஒண்டிரண்டு பேரைத்தான் தொண்டரா வைச்சிருக்கிறன். நீங்கள் வந்தால் தெய் வம் வந்த மாதிரி... உங்களுக்கு உடம்பு ஏலுமோ...?''

அதிபர் குழைந்தார்.

''வரத்தான் போறன். ஒரு பாடவேளை படிப்பிச்சாலும் காரிய மில்லை. இந்த வளவுக்கை உலாவப் போறன்''

சால்வையை உதறிக்கொண்டு எழுந்தார் உபாத்தியாயர். புது இரத்தம் குருதி மயிர்க்குழாய்களில் பரவி முகத்திற்குச் சிவப்பூட்டியது.



# குருவும் தலைமைச்சீடரும்

அமரர் 'எல்லார்வி'
தமிழ்நாடு.

**(தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையவரும், கோயிலில் அமைந்துள்ள இராஜகோபுரத்திற்கு தமிழகத்தில் இருந்து சிற்பாசாரிகளை வருவித்துத் தந்தவருமான சுவாமி ஹரிதாஸ்கிரி அவர்களை நினைந்து இக்கட்டுரை பிரசுரமாகிறது.)**

*பாரத தேசத்தில் ஸத்கதாகாலட்சேப முறை என்பதே மஹாராஷ்டிர தேசத்தைச் சார்ந்த மூர்க்கர் பாபா என்ற பெரியோரால் தான் பல காலத்திற்கு முன்பு அறிமுகம் செய்யப்பெற்றது. பிற்காலத்தில் பிரசித்தமாக விளங்கிய தஞ்சாவூர்க் கிருஷ்ணபாகவதர் தம்முடைய இளம் பிராயத்தில் பாபாவை அணுகி, மாணவராக அமர்ந்து அவரிடமிருந்து காலட்சேப முறையைப் பயின்று பிரசித்தர் ஆனார். அவருக்குப்பின் திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், மாங்குடி சிதம்பரபாகவதர், அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதர், திருவையாறு அண்ணாசாமி பாகவதர், கிருபானந்தவாரியார், எம்பார் விஜயராகவாச்சாரியார் - இப்படி இந்தப் பாரம்பரியம் வளரலாயிற்று. ஆக மஹாராஷ்டிர தேசந்தான் சத்கதாகாலட்சேபத் துறைக்குத் தாயகம் என்பது தெளிவு.*

*அங்கே மூர்க்கர் பாபாவைப் போன்று இன்னும் பலமேதைகள் விளங்கினார்கள். அவர்கள் பெரும்பாலும் ஸ்ரீ மஹாபக்த விஜய கதைகளை மிகச் சிறப்பாக பக்தர்களுக்கு எடுத்துரைத்து வந்தார்கள்.*

*தென்னகத்தைப் பொறுத்தமட்டில் இராமாயணம், மஹாபாரதம். ஸ்ரீமத் பாகவதம், பெரியபுராணம், ஆழ்வாராதியார் சரித்திரங்கள், முதலியவைதாம் பெரும்பாலானவர்களால் சொல்லப் பெறுகின்றன. எப்பொழுதோ, எங்கோ, யாரோ, ஒருசிலர் மிக அபூர்வமாக துக்காராம், கபீர்தாசர். இராமதாசர் முதலிய ஒரு சிலமஹான்களின் சரித்திரங்களை ஸ்ரீ மஹாபக்த விஜயத்திலிருந்து எடுத்து மிகச் சுருக்கமான முறையில் ஒருநாள், இருநாட்கள், மூன்று நாட்கள் என்று சொல்வதுண்டு.*

*இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் சங்கல்ப பூர்வமாக ஸ்ரீ மஹாபக்த விஜயத்தில் உள்ள அறுநூறு மஹான்களின் திவ்ய சரித்திரங்களையும் பல நாட்கள் தொடர்ந்து சொல்லி, பக்தர்களின் உள்ளங்களில் அந்த மஹான்களின் சிறப்புக்களை ஆழப்பதித்து வருகிறார்*

ஒரு மகான். தபோவனம் சத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் அவர்களின் தலைமைச் சீடரான ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள் அவர்களே அவர். இது பாரததேசம் மட்டுமே அறிந்ததன்று; சிங்கப்பூர், மலேஷியா, ஸ்ரீலங்கா, ஃபிலிப்பைன்ஸ், கனடா, ஸ்டேட்ஸ், லண்டன் முதலிய அண்டை நாடுகளும், அயல்நாடுகளும் அறிந்த உண்மை. அங்கெல்லாம் உள்ள பக்தர்கள் நம் ஸ்வாமிகளை மிக அன்போடு அழைத்த வண்ணம் இருக்கின்றனர். இந்த நிலை நாம் செய்த அரும் பெரும் தவப்பயன் ஆகும்.

1971இல் சென்னை மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் ஸ்ரீ ஞானானந்த மண்டலியின் சார்பில் திருவான்மியூர்க்கட்டிட நிதிக்காக ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள் அவர்களின் ஸ்ரீ மஹாபக்த விஜயம் தொடர் கதாகாலட்சேப நிகழ்ச்சி நடைபெற்றது. அதை முன்னிட்டுத் தபோவனத்திலிருந்து புறப்படுகிறபோது நம் ஸ்வாமிகள் தம் குருதேவரை நமஸ்கரித்து ஆசிபெற்றார். ''மிக நன்றாக நடக்கும்; ஸ்வாமி அங்கேயே இருப்பேன்'' என்று அருளாசி வழங்கினார் குருதேவர். ஸ்வாமிகள் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

ஃபிப்ரவரியில் தொடங்கிச் சரியாக ஒரு மாதகாலம் தொடர் நிகழ்ச்சி என்பது திட்டம். ஆனால் அது அந்த எல்லையைக் கடந்து, தொடர்ந்து ஐம்பத்தாறு நாட்களுக்கு நீட்டித்தது. எல்லாம் குருவருள். ஏராளமான பக்தர் கூட்டம் நாளுக்கு ஒருவர் விதம் பல பிரமுகர்கள் பேசினார்கள்.

நிகழ்ச்சித் தொடரின் நடுவே ஒருநாள் திடீரென்று ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள் அவர்களுக்குத் தந்தி ஒன்று வந்தது தபோவனத்திலிருந்து தான். 'ஸ்டார்ட் இம்மீடியட்லி – ஸ்வாமி' என்று தந்தியில் இருந்தது. நம் ஸ்வாமிகளைக் கவலை சூழ்ந்தது. என்ன, ஏது என்று ஒன்றுமே புரியவில்லை. மண்டலி பக்தர்களை அழைத்து விவரம் உரைத்து, பஜனையைத் தொடருங்கள்; நான் சென்று வருகிறேன் என்றார். ஆயிரக் கணக்கில் அவையில் கூடியிருந்த மஹாபக்தர்களுக்கு ஓர் அறிவிப்புக் கொடுத்துவிட்டு உடனே புறப்பட்டார்.

மறுநாள் காலை ஆறுமணி, தபோவனத்தை அடைந்த ஸ்வாமிகள் குருதேவரை நமஸ்கரித்து எழுந்து நின்றார்.

''என்ன? சென்னை நிகழ்ச்சி நன்றாக நடக்கிறதா? ஏன் அதை விட்டு விட்டு இங்கே வந்திருக்கிறாய்?'' என்று குருதேவர் வினவினார். ஸ்வாமிகள் தந்தியைப் பற்றிச் சொன்னார் குருதேவர். ''நான் அனுப்பவில்லையே!'' என்றார். அருகே இருந்த பாலு, ''ஸ்வாமி தான் கொடுக்கச் சொன்னார்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்று மறைந்து விட்டார்.

நம் ஸ்வாமிகள் ஒன்றும் தோன்றாத நிலையில் அன்றுமுழுவதும் அங்கே தங்கி இருந்தார். அடுத்த நாள் குருதேவரிடம் சென்று சென்னை செல்ல உத்தரவு கேட்டார் குருதேவர், அங்கே இன்னும் மண்டலி பஜனையே நடக்கட்டும்; நாளை பார்க்கலாம்'' என்றார்.

உடனே ஸ்வாமிகள் சென்னையிலுள்ள பிரபல வழக்கறிஞர் ஸ்ரீ கிருஷ்ணசாமி அவர்களுக்கு 'டிரங்கால்' போடடார். விஷயத்தைச் சொல்லிட்டுத் தபோவனத்தில் தங்கி இருந்தார்.

மறுநாள் அதிகாலையில் அவர் குருதேவரிடம் சென்னை செல்ல உத்தரவு கேட்டுக் கொண்டிருக்கும்போது பாலு அங்கே வந்தார். ''ஸ்வாமி, இன்று நாள் நன்றாக இருக்கிறது. புதிய கட்டிடத்திற்குக் கிருகப்பிரவேசம் செய்யலாம், பெயர் சூட்டலாம்'' என்றார்.

தபோவனம் ஆசிரமத்தை ஒட்டினாற் போன்று புதிய கட்டிடம் ஒன்று உருவாக்கப் பெற்றிருந்தது. பாலு அதைத்தான் குறிப்பிட்டார். குரு தேவர், ''விளக்கேற்றி, பிள்ளையார் படம் வைத்துப் பூஜை செய்து நடத்து'' என்றார். அவரை அழைத்ததற்கு, ''நான் வரமாட்டேன்'' என்றார்.

ஸ்வாமிகள் குருதேவருக்கு நமஸ்காரம் செய்தார். குருதேவர், ''பாலு! குருஜி வந்திருக்கிறார். அவரைக் கொண்டே நடத்தலாம்'' என்றார். ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள் அவர்களைத் தான் குருதேவர் 'குருஜி' என்று குறிப்பிட்டார். அன்று முதல் இன்று வரை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகள் அவர்களை, 'குருஜி' என்றே குறிப்பிடுகிறார்கள். இனி நாமும் அவ்வாறே குறிப்பிடுவோம்.

ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் அவர்கள் குருஜியை நோக்கி, ''பிள்ளையார், மஹாவிஷ்ணு படங்களை வைத்து நடத்து. இந்தக் கட்டிடம் பாகவதோத்தமர்களுக்காகக் கட்டப்பட்டது. இதற்கு என்ன பெயர் வைக்கலாம்?'' என்று கேட்டார்.

''ஸ்வாமி என்ன நினைக்கிறீர்களோ அதையே வைக்கலாம் என் றார் குருஜி.

''இதற்கு, 'ஹரிபவனம்' என்று பெயர் வைப்போம்'' என்றார் ஸ்வாமி.

எல்லாரும் அங்கே சென்றார்கள். குத்து விளக்கேற்றிப் பிள்ளை யார் பூஜையைத் தொடங்குகிறபோது ஸ்வாமி அங்கே வந்துவிட்டார். பெரும்பாலும் அப்படித்தான் வழக்கம். 'வருகிறேன்' என்று சொல் வார்; வரமாட்டார்; வரமாட்டேன் என்று சொல்வார்; வந்து நிற்பார்.

''எல்லாரும் எழுந்திருங்கள்! மேளம் எங்கே? மேளம் இல்லாமல் கிருகப்பிரவேசம் இல்லை!'' என்று சத்தம் போட்டார்.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்...)

ஓம்

சிறுவர் விருந்து

# போட்டிக்குப் பாடியவன்

**அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

---

அன்பான பிள்ளைகளே!

அன்பு வணக்கம்! நல்வாழ்த்து! புத்தாண்டில் புதுவகுப்புக்குப் போயிருப்பீர்கள். புதிய புத்தகங்கள், புதிய ஆசிரியர், புதிய பாடங்கள் எல்லாம் வெகு, ஜோராயிருக்கும். நன்றாகப் படித்து, நல்லவர்களாக வாழுங்கள்!

தமிழ்க்கடவுளாகிய முருகப்பெருமான் தம் அடியவரான தமிழ்ப்புலவருக்கு நவரத்தினப் பதக்கம் பரிசாகக் கொடுத்த கதை நன்றாக இருந்ததா? சரி இப்போது, முருகப்பெருமான் தாமே பாட்டுப்பாடிய சுவையான கதை ஒன்றை இப்போ சொல்கிறேன்.

தமிழ்நாட்டிலே திருச்செங்கோடு என்ற ஒரு சிறிய மலை இருக்கிறது. அந்த மலையிலே சிவபெருமான் மாதொருபாகராக - அம்மையப்பராகக் கோயில் கொண்டிருக்கிறார். குன்று என்றாலே அங்கே குமரக்கடவுளும் இருப்பாரல்லவா! செங்குன்றிலும் ஒரு சிறு சிகரப் பகுதியில் முருகன்கோயில் உண்டு. முருகன் இருக்கும் பகுதியை நாகாசலம் அல்லது சர்ப்பசயிலம் என்று கூறுவார்கள். ஏனென்றால் அந்த மலைப்பகுதி ஒரு பாம்பு படுத்திருப்பதுபோல வளைந்து நெளிந்து பல சிறு குன்றுகளுடன் நீண்டு இருக்கும்.

அந்த நாகாசலப்பகுதி ஒரு காலத்தில் ஒரு சிறு சமஸ்தானமாக இருந்தது. அந்த சமஸ்தானத்துக்கு ஒரு தலைவர் - அவர் ஒரு பெரிய பிரபு. அவரது சபையிலே நல்ல அறிஞர் சிலர். நல்ல நிருவாகிகள் சிலர் இருந்தார்கள். அவர்களோடு தமிழ்ப்பற்று நிறைந்த அந்தப்பிரபு ஒரு நல்ல கவிஞரையும் தமது சபையில் வைத்திருந்தார் - அந்தக் கவிஞர் பெரிய ராஜசபைக் கவிஞரல்ல. சிறிய சமஸ்தானத்தில் ஓரளவு பாடும்புலமை படைத்த, ஆனால் முருகபக்தியில் செழித்த புலவர். நல்லவர். நாகாசல முருகனைக் காலை மாலை தரிசித்து உள்ளம் கசிந்து கண்ணீர் ததும்பப் பாடிப்பரவி வழிபடும் நியமம் உள்ளவர். குணசீலர் என்பது அவர் பெயர். பெயருக்கு ஏற்ற நற்பண்பு நிறைந்தவர். அந்த நாளிலே தமிழ் நாட்டில் 'பிரதிவாதி பயங்கரம்' என்று ஒரு அறிஞர் இருந்தார். நிரம்பப் படித்தவர். நினைத்தவுடன் வெண்பா முதலிய கவிதை வடிவங்களில் பாடல் புனையும் வல்லமை படைத்தவர். எல்லாவற்றையும் விடப் பெயருக்கேற்றமாதிரி ரொம்பப் பயங்கரமானவர்.

அவர் என்ன செய்வார் தெரியுமா? அடிக்கடி ஏதாவது ஒரு ஊருக்குப் போவார். அங்கே உள்ள பெரியவர்களை அழைப்பார். தம்முடைய கேள்விகளுக்குப் பதில் கூறுமாறு சவால் விடுவார். கேள்விகள் பெரும்பாலும் சிலேடையான கவிதை வடிவில் வரும். உடனே பதில் சொல்லாவிட்டால் எதிராளியின் மானத்தை வாங்கிவிடுவார். மிக மோசமாக இகழ்ந்து அடிமைப்படுத்துவார். இதனாலே தான் அவருக்குச் சொந்தப்பேர் மறைந்து ''பிரதிவாதி பயங்கரன்'' என்று பேர் வந்தது.

இந்தப்பயங்கரமான புலவரைச் சுற்றி ஒரு கூட்டமும் இருந்தது. இவர் புகழைப்பாடிப், பேசி, வயிறுவளர்க்கும் கூட்டம் அது. புலவர் ஏதாவது ஒரு ஊருக்குப் புறப்படுகிறாரென்றால், அதற்கு முன்னால் சில நாட்களில் அவர் இன்ன ஊருக்கு வருகிறார் என்று இவர்கள் போய்ச் சொல்லி, பயமுறுத்தி விடுவார்கள்.

இப்படி ஒருமுறை ''பிரதிவாதி பயங்கரம் நாகாசலத்துக்கு வரப் போகிறார்'' என்று செய்தி வந்தது. நாகாசலத்தை நிருவகித்த பிரபு தம்முடனிருந்த புலவரை, குணசீலரைக் கூப்பிட்டார்.

''ஐயா? புலவரே! பிரதிவாதி பயங்கரம் நம் ஊருக்கு வருகிறார். அவர் கேட்கிற கேள்விக்கு நல்லபடி பதில் சொல்லி, நம்மூர் மானத்தை நீர்தான் காப்பாற்ற வேண்டும்.'' என்று சொல்லி விட்டார். புலவர் மருண்டு போனார். ''பிரதிவாதி பயங்கரம் உலகப் புகழ்பெற்ற அறிஞர். கவிஞர் தாம் ஒரு சுண்டைக்காயளவு சமஸ்தானத்திலே கவிஞர் என்று குப்பை கொட்டுகிற சிறியவன். சரிதான். இவ்வளவு காலம் சுகமாகச் சீவித்ததற்குத் தண்டனையாகக் காது அறுபடப்போகிறது'' என்று தீர்மானித்துக் கொண்டார். நேரே நாகாசல முருகன் சந்நதிக்குப் போனார். ''முருகா! நீ தமிழ்க் கடவுள். தமிழில் புலவன். உன் முன்னிலையில் 'நானும் புலவன்' என்று சொல்ல எனக்குத் தகுதி இல்லை. ஆனால்; பிரபு என்னை நம்பி, வம்பிலே மாட்டிவிட்டார் பிரதிவாதி பயங்கரத்தை நேருக்கு நேர் காணக்கூட என்னால் முடியாது. என்னைக் காப்பாற்று'' என்று கண்ணீர்விட்டு அழுது புலம்பினார். கோயிலே தஞ்சம் என்று கிடந்தார்.

அடுத்த நாள் பிரதிவாதி பயங்கரம் தமது பரிவாரங்கள் சூழ நாகாசலத்துக்குப் புறப்பட்டார். நாகாசலம் குன்றுப்பகுதி அல்லவா! உயரத்தில் ஏறி நடந்தால் எல்லோரும் களைத்துப் போனார்கள். அங்கே ஒரு சிறிய ஆறு - ஓடையாக ஓடிக்கொண்டு இருந்தது. அந்த சிற்றாற்றின் கரையில் மரநிழலில் தங்கி, நீர்பருகி இளைப்பாறினார்கள். ஆற்றோரம் பற்றைக்காட்டில் ஒரு சிறுவன் ஆடுமேய்த்துக் கொண்டு நின்றான். பிரதிவாதி பயங்கரம் அந்தச் சிறுவனைக் கூப்பிட்டார்.

''டேய் தம்பி! இந்த ஊருக்குப் பேரென்ன?'' என்று கேட்டார்.

''நாகமலை'' என்றான் சிறுவன்.

உடனே இவர் தம் புலமையை வெளிக்காட்ட விரும்பி, ''அட! இந்த வளைந்து கோணலான செங்கோடு என்று பேர் கொண்ட மலை நாக மலை என்றால், அது ஏன் படம் விரித்து ஆடாமல் படுத்துக்கிடக்கி றது?'' என்ற கருத்துப்பட,

''சமரமுகத் திருச்செங்கோடு சர்ப்பசயிலமெனில்
அமரில் படம் விரித்து ஆடாததென்னை?''

என்று இரண்டு வரியை எடுத்துவிட்டார். உடனே அந்த ஆடுமேய்க்கும் பையன் பதில் சொன்னான் பாட்டாகவே...

''அ:து ஆய்ந்திலையோ? நமரின் குறவள்ளி பங்கன், எழுகரை நாட்டுயர்ந்த குமரன் திருமருகன் மயில்வாகனம் கொத்துமென்றே'' சற்றும் தயங்காமல்; அது உனக்குத் தெரியாதா? மலைநாட்டவராகிய எங்கள் குலத்தில் பெண்கொண்டு குறவள்ளியை மணந்து, இந்த செங்கோட்டில் அமைந்திருக்கும் ஏழு சமஸ்தானங்களிலும் மிகச் சிறப் புப் பெற்ற நாகாசலத்தில் குடிகொண்டிருக்கும் லட்சுமிதேவியின் மரு மகனும், இளைஞனும் ஆகிய முருகனுடைய வாகனமாகிய மயில் (கொத்திவிடும் என்றுதான் நாகம்படம் எடுத்தால் பாய்ந்து கொத்தி விடும் என்ற பயத்தால்தான் நாகமலை படுத்தே கிடக்கிறது) பயங்கர மான புலவருக்கே பயம் வந்துவிட்டது. ''அட! ஒரு ஆடுமேய்க்கும் சின் னப்பிள்ளை இப்படிப் 'பட்' டென்று பாட்டாலே பதில் சொல்லுகி றானே! இந்த நாகாசலத்தில் படித்தவர், அறிஞர்கூட நாம் போட்டியிட்டு வெல்லுவது முடிகிற காரியமா?'' அவர் தம் சீடர்குழாத்திடம் சொன் னார். ''எனக்கு உடம்பு நல்லா இல்லை. கொஞ்சம் காய்ச்சல் வரும் போல இருக்கு. இந்த மலைநாட்டுப் பயணம் ஒத்துவரவில்லை. உடனே ஊருக்குத் திரும்பிப் போவோம்.''

எல்லோரும் புறப்பட்டு, ஊருக்கே திரும்பிப் போய்விட்டார்கள்.

பிரதிவாதி பயங்காம் நம் ஊருக்குப் பாதி வழிவந்து, ஒரு இடைப் பையனுடன் பேசிவிட்டுத் திருமபிப்போய்விட்டார் என்ற செய்தி, சமஸ் தானத்து தலைவருக்கு வந்தது. எல்லோருக்கும் ஆச்சரியம். நமது புலவருக்கோ நிம்மதி ''காது தப்பிவிட்டதே! சுந்தனின் கருணைதான் இது'' என்று உணர்ந்து நாகாசல முருகனை நாவார, மனதாரத் துதித்தார்.

''கூகா எனஎன் கிளைகூடியழப்
போகா வகைமெய்ப் பொருள் பேசியவா!
நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகா! சுலோக சிகாமணியே!''

என்று அருணகிரிநாதர் பாடுகிறார். இந்தப் பாட்டை நாமும் பாடி முருகன் அருளைப் பெறுவோமாக.

(சர்ப்பம் — நாகம், பாம்பு சலம், சயிலம் — மலை)

உ

சிவமயம்

# நாளும் ஓதி நற்பயன்பெற ஞானசம்பந்தருடைய நற்றமிழ் மாலை

திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள், ஏழாலை

---

*திருமுறை தமிழ் மறை. அவை பன்னிரண்டு. அவற்றுள் முதல் மூன்று முறைகள் மறையவர் குலத்து ஆளுடைய பிள்ளையாருடையவை.*

*முதலாம் திருமுறை 136 திருப்பதிகங்களையும், இரண்டாம் திரு முறை 122 திருப்பதிகங்களையும் மூன்றாம் திருமுறை 126 திருப்பதிகங் களையும் உடையவை.*

*மூன்று திருமுறைகளும் மொத்தமாக 4158 தேவாரங்களைக் கொண் டவை. அவை யாவும் இறைவாக்கே என்பதனை ஞானசம்பந்தப் பெரு மானுடைய,... 'நெய்த் தானம் நிலையினானெனதுரை தனதுரையாக—' எனவரும் தேவாரத் திருமொழி உறுதிப்படுத்தும்.*

*முத்தமிழ் வி்ரகருடைய உத்தமத் தமிழ் வேதசாரம் என்பதனை, ''பழைய வேதத்தைப் புதிய தமிழில் தந்த பூசுரர் எனச் சேக்கிழார் போற்றுவதால் புரிந்து கொள்ளலாம்.*

*இவ்வாறு இறைவனுடைய உரையாகவும் பழமறைப் பொருளாக வும் ஞானசம்பந்தருடைய நற்றமிழ் யாவும் நலஞ் சிறந்தன. ஓத ஓத உயர்த்துவன. பாடப்பாடப் பயன் பயப்பன. கேட்கக் கேட்கச் செவிக்குத் தேனாகத் தித்திப்பன. சிந்திக்கச் சிந்திக்கச் சிந்தையைத் தெவிட்டுவன. மனத்தை இயற்கை இன்பத்தில் ஆழ்த்துவன. திருவருள் வசத்தில் வழிப் படுத்துவன. உண்மையை ஓங்குவிப்பன. உயிரை உயர்கதிக்கு உயர்த்து வன. இடரைக் களைவன.*

*எம்பெருமான் வேகங் கெடுத்து ஆளவில்லை என்றால் நான் முந்தீ நீ முந்தி என்று வேகத்தை மேற்கொள்ளும் காலம் இக்காலம். ஞான சம்பந்தப் பெருமான் காலத்திலும் 24 மணி கால அளவில் பூமி தன் னைத் தானே வலம் வந்தது. இன்றும் அதே கால அளவில் தான் தன் சுழற்சியை நடாத்தி வருகின்றது. இருந்தாலும் பூமியில் வாழும் மாந் தருக்கு போதிய நேரம் போதாமை கண்கூடு. அதனால் திருமுறைகளை ஓதுவதற்கோ அல்லது ஓதப்படும் திருமுறைகளை உடன் இருந்து பொறு மையோடு கேட்கவோ முடியாமை உள்ளங்கை நெல்லிக்கனி போல் வெளிப்படை.*

இவை யாவும் தில்லைநாதர் முன்னராகத் திருவுளத்தில் கொண்டமையால் அன்றோ இலட்சக்கணக்கான தேவாரங்களை ஆயிரக் கணக்கில் ஆக்கிவிட்டார்.

ஆயிரக்கணக்கிலுள்ள திருநெறிய தமிழை ஆராதிக்க அவகாசம் இல்லை எனினும் விரல் விட்டு எண்ணத்தகும் ஒரு சில பதிகங்களை ஓதலாம். ஒருமையுடன் மனம் வைத்து அப்பதிகங்களை ஓதிவரின் பெரும் பலனடையலாம். சிவஞான பூசை பண்ணிய பயன் பெறலாம். சைவத்திற்கும் தமிழிற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் உலகிற்கும் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற பணிபுரிந்தவர்கள் ஆவார்கள்.

உதாரணத்திற்கு ஒரு சில பதிகங்களைக் குறிக்கலாம். முதலாம் திருமுறையில், 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதி வர, எளிதாகத் தொல் வினையிலிருந்து நீங்கலாம்.

திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில்ஒன்றான 'தடநிலவிய மலை' என்னும்சொற்றொடரோடு தொடங்கி ஓதுவதனால் மலர்மகள் கலைமகள் சயமகள் இனமலி புகழ்மகளிசைதர' இவ்வுலகில் இனிதாக வாழலாம்.

நோய் நொடிகள் வினைகள் சாராதிருக்கத் திருப்பாச் சிலாச் சிராமத்திருப்பதிகமான 'துணிவளர் திங்கள்' எனத்தொடங்கும் தண்தமிழ் மாலை சாற்றலாம்.

பண்ணிய உலகில் பயின்ற பாவம் பறைய, ''மறையுடையாய்'' எனத் தொடங்கும் திருநெடுங்களத் திருப்பதிகம் பயனளிக்கும்,

பண்ணோடு பதிகம்பாடுவது பண்பு. குரல்வளம்இன்றியும் இரங்கிப் பாடினாலும் இறைவன் அருள் செய்வான் என்று கானத்தின் எழுபிறப்புக் கருணை காட்டுவதை நினைவில் இருத்தல் நன்று!

''கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை
கூடுவகையால், ஏழையடி
யாரவர்கள் யாவை சொன சொல் மகிழும்
ஈசனிட மாம். —'' (திருமுறை 3)

★ ★ ★

## ஸ்ரீ துர்க்கா

சக்தி வேலாயுத மளித்தருளும் சங்காரங்களுக கதிபதியே
பக்தியாலுனை தொழுகின்றேன் பாவியெனக் கருள் புரியாயே!
முக்தியருள் புரியும் முழுமுதலாய் விளங்கு ஸ்ரீ துர்க்கா!
சக்தியருள் புரிவாய் சான்றோனாய் வாழ்வதற்க் கிங்கு!

இராம ஜெயபாலன்
கொக்குவில்

# துலாபாரத்தானம்

**ஆ. கதிரமலைநாதன்**
பண்ணாகம்.

சோழப் பேரரசு உச்ச நிலையிலிருந்த காலப்பகுதியில் ஆட்சி புரிந்த மாமன்னர்களினால், பல்வகைத் தானங்கள் ஆதரவற்றவர்கட்கும், ஏழைகட்கும், சிறப்பாகக் கோவில்கட்கும் வழங்கப்பட்டு வந்ததாகக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், மெய்க்கீர்த்திகள் என்பவற்றின் உதவியுடன் அறிய முடிகின்றது. இத்தகைய தானங்களுள் 'துலாபாரத் தானம்' என்பதுவும் குறிப்பிடப்படுகின்றது.

அதாவது அரசன் ஒருவன் தனது பிறந்த நடசத்திரம் கூடிய நாளன்றாயினும், முடிசூடிக் கொண்ட நட்சத்திரம் கூடிய நாளின் (நாண்மங்கலம்) போதாயினும், போர்களில் வெற்றி கிடைத்த சந்தர்ப்பங்களிலாயினும் தன் எடைக்குச் சமனான அளவு பொன், பொருட்களையோ, நாணயங்களையோ தானமாக வழங்கும் செயலையே இது கருதுகின்றது.

பொதுவாக இவ்வாறு தானம் வழங்கப்படும் போது, அரசன் பொதுமன்றில் நிறுத்தப்பட்டுள்ள துலாபாரத்தின் (தற்போதைய தராசு) ஒரு தட்டில் ஏறி அமர்ந்து கொள்ளுவான்.

மறு தட்டில் அவன் தனது குடி மக்களுக்குத் தானமாகக் கொடுக்க விரும்பும் பொருட்கள் வந்திருந்தோர் காணுமாறு வைக்கப்படும். இரண்டு தட்டுக்களும் சமனாகும் போது (அதாவது அரசன் நிறைக்கு ஒப்பாகும் வேளை) இவை இறக்கப்பட்டு தேவையானோருக்கு வழங்கப்படும்.

இறைவன் பேரிற் கோவில்கட்கு இவ்வாறு தானம் செய்யும்போது அவன் குறித்த கோவிலின் முன்றலில் நிறுத்தப்பட்டுள்ள துலாபாரத்திற் தானே அமர்ந்து கொள்ளாமல், தனது எடைக்குச் சமனான ஒரு மரக் குற்றியையோ அல்லது வேறு ஏதாவது திடப்பொருட்களை பயன்படுத்தியிருக்க வேண்டுமென்றே கருத முடியும்.

மறுதட்டில் கோவிற் தேவைக்குப் பயன்படுத்த உதவும், செம்பு-பித்தளை உலோகப் பாத்திரங்களையும் பொன் - வெள்ளி நாணயங்களையும் வைத்து இரண்டு சமனாகும் போது அவை கோவிற் காரியத்தாருக்குக் கையளிக்கப்பட்டன.

பொன்-வெள்ளி நாணயம், பொருட்கள் என்பவற்றைப் போன்று மலர்களையுங்கூட இறைத்தேவைக்காக வழங்கியிருக்க வேண்டுமென ஊகிக்க இடமிருக்கின்றது.

நாட்டில் மழை பொய்த்து இறைத்தேவைக்கான மலர்களைப் போதியளவு பெற்றுக்கொள்ள முடியாதபோது, அரசன் தனதுஅரண்மனை, மலர்ச்சோலையிலிருந்து பலவகையிலும் பயன்படுத்தத்தக்களவு மலர்கள்-பச்சிலைகளைத் தானமாக வழங்க முன்வந்திருக்கலாம்.

இச்சந்தர்ப்பத்திலும் மலர்களின் பவித்திரத் தன்மையைக் கருத்திற் கொண்டு, தானே நேரில் மறுதட்டில் இருப்பதனைத் தவிர்த்துக்கொண்டிருக்கலாம் எனவும் கொள்வது ஏற்கத்தக்கதாயுள்ளதல்லவா?


மன்னர்கள் தாம் மட்டுமன்றி தமது சிற்றரசர்களும், பிரதானிகளும், குடும்ப உறுப்பினர்களும் இவ்வாறே செய்வதற்கு ஊக்கமளித்ததாகவும் அங்குமிங்குமாகக் காணப்படும் குறிப்புக்களிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகின்றது.

★ ★ ★

## வளங்காண்போம்

காத்திடுவாய்! எங்கள் காமாட்சி – வினை
தீர்த்திடுவாய்! துயரம் மாற்றிடுவாய்! புவி (கா)
அபிராமி பட்டரின் அருந்தமிழ்க்கு வந்தாய்!
அருட்பிரகாச வள்ளலுக்கோ அன்னம் வகுத்தாய்!
அமுத காழிப் பிள்ளைக்குப் பாலமுது தந்தாய்
தொழு குமர குருகவிக்கே சிறு குமரியானாய்! (கா)
பரமஹம்ஸ முனிவன் கண்ட பவதாரிணி – முக்கண்
பரமசிவன் பாகம் கொண்ட அவதாரிணி!
புவனமுழுதும் படரும் தீமை நீர்த்தாரணி! — முன்
பவ வினைகள் போக்கும் சத்திய சம்பூரணி! (கா)
மகாதேவி, மகாமாயா, மகாத்ரிபுரசுந்தரி,
மகா காமேஸ்வரிதேவி, மகிமாஸித்தி, மகேஸ்வரி,
மகாலக்ஷ்மி, மாஹேந்த்ரி, மகிஷாகர மர்த்தினி,
மகாசக்ர நாயகி! எனப் போற்றும்மடியாரைத் தினம் (கா)
கருணை பொழியும் அகமும், கமலமன்ன முகமும்,
வருணனைக்கு எட்டாத வடிவழகும் வேலினையும்
திருமகளிர் எட்டும் திகழ்ந்திருக்கும் ஸ்ரீசக்ர
உருவமதிற் பொலிந்தே உலகமது உள்ளவரை (கா)

ரி. தமிழ்மாறன்


பால் சுரக்கும் பசுவை நாளும் வணங்குவோம்
பட்டிப் பொங்கல் செய்து – பயன் பெற்ற
நன்றி செய்வோம்.
அட்டைப்பதிப்பு-பிள்ளையார்